Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 59 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.9**

Defence

Court

| | |
|---|---|
| Name | டாக்டர் இந்திரஜித் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 27th day of January 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 27th day of January 2026.**

**2 வது எதிரி இறந்துவிட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய் விட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் தற்போது உதவி போராசிரியராக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சிதம்பரத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ஆம் ஆண்டு கடலூர் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்தேன். கடந்த 06.09.2020 அன்று மதியம் 1.50 மணியளவில் கார்த்திக் த.பெ பரமசிவம் 23 வயது ஆண், எண்.51/11 எடப்பாளையம் தெரு, திருவதிகை பண்ருட்டி தாலுக்கா அவர்கள் தன்னை 6 தெரிந்த நபர்கள் மண்டபத்து அருகில் 05.09.2020 அன்று மாலை 6.45 மணியளவில் இரும்பு தடியால் அடித்துவிட்டதாகவும் கூறினார். நான் பரிசோதனை செய்த போது அவரதுஇடது கையில் வலி இருந்ததது. வேறு எதுவும் வெளிப்புறக்காயங்கள் எதுவும் இல்லை. புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். காயத்தின் தன்மை சொற்பகாயம். **நான் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அதசாஆ 6 ஆகும்.** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

சம்பவம் நடந்து 15 மணி நேரம் கழித்து தான் என்னிடம் சிகிச்சைக்காக கார்த்திக் அழைத்து வரப்பட்டார் என்று சொன்னால் சரிதான். இரும்பு ராடால் தாக்கப்பட்டால் அந்த ராடினால் ஏற்படும் அழுத்ததின் காரணமாக காயத்தை சுற்றி அழுத்தம் அல்லது இரத்தக்கட்டு இருக்கும் என்றால் இருக்கலாம். ஆனால் அதுபோல்

கார்த்திக்- ன் உடம்பில் பாதிப்பு எதுவும்இல்லை என்றால் சரிதான். அவர் நேரடியாகத் தான் கடலூர் அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான்,. பண்ருட்டி அரசு மருத்துவமணையில் இருந்து Refer செய்து வரவில்லை என்றால் சரிதான். வலி என்பது சாதரணமாக உடல் உபாதை காரணமாக ஏற்படலாம் என்று சொன்னால் சரிதான். என்னை பண்ருட்டி பயிற்சி துணைகண்காணிப்பாளர் விசாரித்தாரா என்று குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. ஆயுதங்களை காண்பித்து விசாரித்தார்களா என்று ஞாபகம் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*